## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.50/2024

இந்நீதிமன்ற இளநிலை உதவியாளர் திருமதி சி. நிர்மலா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரோஸ் கான் | மதம் | : முஸ்லீம் |
| த/பெ | : ஹாஜி அஹமத்கான் @ H.A. கான் @ கிரண் | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : -- |
| தொழில் | : வியாபாரம் | வட்டம் | : பெங்களூர் |

**16.07.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

3. எனது ஆதார அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். (**ஆதார் அட்டை வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 17.12.2022ம் தேதியிட்டு கே.எஸ்.பிரகாசம் என்ற கே.இ.எஸ்.பிரகாசம் என்ற பாதான்ஜபரூல்லாகான் எழுதி வைத்த உயில் அசல் தாக்கல் செய்கிறேன். (**உயில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிராதுபடி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.50/2024

இந்நீதிமன்ற இளநிலை உதவியாளர் திருமதி சி. நிர்மலா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபால் | மதம் | : இந்து |
| த/பெ | : கோபால் | ஜாதி | : -- |
| வயது | :58 | கிராமம் | : சின்னம்மாபேட்டை |
| தொழில் | : ரயில்வே | வட்டம் | : திருத்தணி |

16.07.2025

**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆதார் அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். ( **ஆதார் அட்டை சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 உயிலில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். (**உயிலில் உள்ள கையெழுத்து வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.